**புளத்சிங்ஹல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்சிங்ஹல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 3,232,282 தொகையான கெப் வண்டி, ரூபா 6,009,602 தொகையான ட்ரெக் வண்டி மற்றும் ரூபா 25,100 தொகையான கை வண்டி மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 25,100 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட குப்பை வண்டி என்பன மூலதனமாக்கப்படாமையினால் ரூபா 9,292,084 இனால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,993,928 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,260,918 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 1,733,010 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் மீளாய்வாண்டின் ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 31,010 தொகை குறைவாக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானமாக ரூபா 6,670,809 தொகை நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் எந்தத் தொகையும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,670,809 ஆக இருக்க வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,181,358 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறவேண்டிய முத்திரைக கட்டணம் ரூபா 3,489,451 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியத் தொகை ரூபா 12,584,755 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,293,928 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மூலதன மானியத் தொகை ரூபா 709,173 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 36,920,159 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 37,629,332 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 709,173 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 12,651,351 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,487,441 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் ரூபா 163,910 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 5,913,718 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,498,827 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 414,891 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 252,655 ஆக இருந்ததுடன் அவைகளுக்குரிய பட்டோலைகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 277,924 ஆனமையால் ரூபா 25,269 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்கு**

மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 2,534,272 தொகை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 7,399,960 தொகையான பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எந்தவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடன் இணங்காமைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 48,795 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாம் சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான மெய்மையாய்வு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,649,735 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,672,077 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 901,648 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஆதனவரி

(அ) மீளாய்வாண்டின் ஆதனவரி பற்றுச்சீட்டிடல் ரூபா 2,052,880 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 1,410,217 தொகை அதாவது 64 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 131,010 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 15,437 தொகை அதாவது 12 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 758,136 ஆகும்.

#### 2.2.3 ஏக்கர் வரி

2015 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள வருடங்களுக்குரிய ஏக்கர் வரி ரூபா 104,083 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கு ஏக்கர் வரி ரூபா 45,000 தொகையான பற்றுச்சீட்டிடல் மீதியில் 92 வரி அலகுகளுக்குரிய ரூபா 36,379 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 25 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,058,683 தொகையொன்று பின்வருமாறு கிடைக்கவேண்டியிருந்தது.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 7,877,326 |
| முத்திரைக் கட்டணம் | 3,181,357 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குரிய வட்டி மற்றும் தவணைப்பணம் தாமதமாகச் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் ரூபா 18,878 தொகையான தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 11 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 176,803 தொகையான கடன் மீதியை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையின் ஊடாக உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காக 2008 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 123,500 இற்கு கைவிரல் அடையாள இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2013 ஏப்ரல் மாதம் அந்த இயந்திரம் செயற்பாடற்று பழுதுபார்ப்பதற்காக 2013 மே 08 ஆந் திகதி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. சபை 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி பழுதுபார்ப்பதற்கான மதிப்பீட்டுத் தொகையான ரூபா 54,264 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரத்தை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு 2016 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 07 ஆந் திகதி கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 22,800 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புளத்சிங்ஹல பொது நூலகத்தில் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 17,015 பெறுமதியான 68 புத்தகங்களும், பொலேகொட பொது நூலகத்தில் ரூபா 1,495 பெறுமதியான 09 புத்தகங்களும் தொலைந்து போயிருந்ததுடன் அந்த தொலைந்துபோன புத்தகங்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சீருடை படி செலுத்துதல்

(i) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையின் 05/2013(அ) ஆம் இலக்கத்தின் பிரகாரம் இதுவரை சாரதிகளுக்கும் அலுவலக உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட சீருடை மற்றும் தையற்கூலிக்குப் பதிலாக ரூபா 4,000 வருடாந்த படியொன்று 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் செலுத்தவேண்டியிருந்த போதிலும், அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 183,215 தொகை செலவில் சீருடை வழங்கப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் (ஆ) இன் பிரகாரம் சீருடை படி பெறுகின்ற உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தின் போது சீருடை அணியாதிருப்பார்களாயின் அது தொடர்பாக 1991 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 27/91 ஆம் இலக்கத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நிறுவனத் தலைவர் கண்காணிக்க வேண்டிய போதிலும், சபையில் சீருடை அணிவதற்கு நிர்ணயிக்கப்பட்ட

மற்றும் சீருடை பெற்ற உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் தினங்களில் மாத்திரம் அதனை அணிந்திருந்தமை 2016 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் சேவையாற்றுகின்ற ஆயுர்வேத வைத்தியர் 02 தினங்கள் பாணந்துறை பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சபையின் கீழ் ஆயுர்வேத மருந்தகமொன்று இல்லாதிருந்த போதிலும் அந்தச் சபையில் சேவையாற்றுவதற்காக அந்த வைத்தியருக்கு 2015 மே மாதம் முதல் சபையின் மூலம் ரூபா 422,592 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 3 | 3 | - |
| இரண்டாம் | 36 | 32 | 4 |
| கனிஷ்ட | 117 | 115 | 2 |
| | 156 | 150 | 6 |

சபையின் பதவியணியினரில் 06 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், உள்ளபடியான பதவியணியினராக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

திரிவானாகெட்டிய வத்த மஹகம தோட்டத்தில் இஹல வெல்கம சிங் கீனஸ்வத்த வீதியின் ஒரு பகுதியில் 265 மீற்றர் நீளமும், 2.74 மீற்றர் அகலத்திலும் கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 1,500,000 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் தாங்கும் முட்டுக்களுக்காக ரூபா 31,858 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது தாங்கும் முட்டுக்கள் 32, 30 மீற்றர் என்ற தூரத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. வீதியின் ஓரங்களில் 02 இடங்களில் வெடித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்